224501

Y592.C
N16
224501

For Private Circulation Only

729
1-16

29 FEB 1916
MADRAS



தொண்டைமண்டலம்

சோழிய வேளாள மரபார் தாங்கள்
நடந்து கொள்ளுவ தற்காக
ஏற்படுத்திக்கொண்ட

# விவகார, ஆசாரசட்டமும்,

எட்டயபுரம் சமஸ்தான வித்வான்,
திருமயிலை
வி. சுந்தரமுதலியாரவர்களால்
தொகுத்தெழுதியதமிழ்நாட்டு

# மூவேந்தர் நீதிமுறையும்,
# வேளாளகுல விளக்கமும்

சேர்த்து மேற்படி,

சோழிய வேளாளர் மரபுதரும
சங்கத்தாரால்,

சென்னை மஹாலட்சுமி விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டன.

இராக்ஷஸ ௵ வைகாசி ௴

1915.

இதன் விலை அணா 2.

Y592.C
16
224501

உ

ஸ்ரீசற்குருவேநம:

# இந்தியாவின்காட்சியும், அதில்-அரசாட்சி செய்த தமிழ்நாட்டரசர்களின்மாட்சியும்.

——):o:(——

திருக்குறள்-கடவுள்வாழ்த்து.

*அகரமுதல வெழுத் தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

திருமகளுக்கோர் திலகம்போல் விளங்குகின்ற, இந்தியாவின் எல்லையானது-வடக்கே இமயமலை, தெற்கே கன்னியாகுமரி, மேற்கே மேல் சமுத்திரம்- ஆப்கானிஸ்தான், பெலுகிலுஸ்தான், கிழக்கே கீழ்சமுத்திரம்-பர்மாதேசம். இதற்கு மத்தியிலுள்ளது இந்தியாவென்று பெயராம். இவ்விந்தியாவும், விந்தைகிரிக்கு வடக்காயுள்ளது-வடஇந்தியாவென்றும், தெற்காயுள்ளது-தென்இந்தியாவென்றும் பெயர் பெறும். இதில், தண்டகநாட்டெல்லையானது, மேற்கண்ட தென் இந்தியாவுக்குள் ளடங்கியதாகும், தண்டகாரணிய மென்பது, தண்டகனென்னும் ஒரு அரசனால் ஆளப்பட்ட காடார்ந்த நாடாம். இதற்குப் பிரமாணம்.

முக்கணான் கணநாதர்க்கு முதன்மைத் துண்டீரநாடு
மிக்கதண்டீர நாடாய்த் தண்டகவேந்தன் றாங்கித்
தக்கதண் டகனன்னாடாய்த் தபனன்மா குலத்துச்சோழன்
தொக்கதார்த் தொண்டமான்காத் தாயது தொண்டைநாடே.

என்றும், தமிழ்நாட்டெல்லையானது-தென்றிசைக்கண் கன்னியா குமரியும், வடதிசைக்கண்-வேங்கடமும், கீழ்த்

---

*இந்த உலகத்தோற்றத்திற்குக் காரண கர்த்தாவாயுள்ள ஆதிபகவனைச் சுட்டியே நாயனார் கடவுள் வாழ்த்தாகக் கூறினாரென்பதாம்.

திசைக் கண்ணும், மேற்றிசைக் கண்ணும், கடலும் எல்லையாக உடையநாடு தமிழ்நாடாம்.

## நன்னூல்.

குணகடல் குமரி குடகம் வேங்கட
மெனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடவுள்?

என்றும் கூறுவதே சான்றும்.

இந்தியா முழுவதும், பண்டைநாள் தொடங்கி, ஒவ்வொரு காலத்தில், ஆண்டுவந்தவர்கள் தமிழ்நாட்டரசர்களாகிய சேர சோழ பாண்டியர்களே ஏகச்சக்ராதிபதிகளாகயிருந்தார்களென்பதற்குச் சந்தேகமின்று.

## சேக்கிழார் நாயனார்-பெரியபுராணம்.

குலகிரியின் கொடுமுடிமேற் கொடிவேங்கைக் குறிபெழுதி
நிலவுதரு மதிக்குடைக்கீழ் நெடுநிலங்காத் தினிதளிக்கு
மலர்புகழ் வண்டமிழ்ச்சோழர் வளநாடு மாமூதூ
ருலகில் வளரணிக்கெல்லா முன்னுறைபூ ராமுறையூர்.

இச்செய்யுளால், புகழ்ச்சோழர் வடதேசத் தரசரையெல்லாம் வென்று தனது புலிக்கொடியை மகமேருவின் மீது நாட்டினரென்றுந் தெரியவருகிறது. ஓர்காலத்தில், சேரதேசத்தரசனும் ஐம்பத்தாறுதேசத்தரசர்களை வெற்றிகொண்டு, தனது விற்கொடியை மகமேருவில் நாட்டினன் என்றுந் தெரியவருகிறது.

இதில், சேரமண்டலம், சோழமண்டல-(தென்சோழம்) தொண்டை மண்டலம் (வடசோழம்) பாண்டிய மண்டலம், ஆக மண்டலம் நான்காம்.

## இந்தமண்டலங்களின் சிறப்பு.
### ஒவையார் கூறியது.

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து-பூழியர்கோன்
றென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து.



இதன் கருத்து-சேரநாடு ஆனைகளிற் சிறந்தது, சோழநாடு சோற்றிற் சிறந்தது, பாண்டிநாடு முத்திற் சிறந்தது, தொண்டைநாடு சான்றோரிற் சிறந்தது.

## மூவேந்தரின்குலம்.

சேரன்-அக்கினி குலத்திலும், சோழன்-சூரிய குலத்திலும், பாண்டியன்-சந்திர குலத்திலும் பரம்பரையாக செனித்தவராவர். இந்த மூவேந்தர்களின் மகிமையை விசாரிக்குமிடத்தில், இவர்கள் சாமானியர்களல்லர், அநேகர், சிவானுக்கிரகம் பெற்றவர்கள். இவர்களால் மும்மண்டலத்திலும், அநேக சிவாலயங்களும், விஷ்ணுவாலயங்களும், பிரதிட்டைசெய்து, அதன், நித்தியபூசை திருவிழா முதலியவை நடந்தேறிவருவதற்கு வேண்டுமான விளைநில முதலிய பூஸ்திதிகளும், திருவாபரணங்களும், தோப்புகளும் தானஞ் செய்திருக்கிறார்கள். இவர்களில், சோழராஜர்கள் செய்தசிவப்பிரதிட்டைகள் அதிகமாயிருக்கும்.

## இவர்கள்-ஒழுக்கம்.

இத்தமிழ் நாட்டரசர்கள் - நல்லொழுக்கம், ஆசாரம் தேவதாபக்தி, நீதிவழுவாது செங்கோல் நடாத்தி வந்துள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள். அதனாலன்றோ, சிவபெருமான், அவர்களன்பினையும், நீதியினையும் ஆங்காங்கு வெளிப்படுத்தி யிருக்கின்றனர்.

இத்தமிழ் நாட்டரசர்களைப்போல, ஐம்பத்தாறு தேசத்து அரசர்களில், சிவபுண்ணியமும், சிறந்த புகழும், நற்கதியும் பெற்றவர்கள் வெளிப்படவில்லை.

## இவர்கள்-இராஜதானி.

சேர ராஜனுக்கு இராஜதானி, கருவூர் (அல்லது-வஞ்சி) மகோதை (அல்லது-கொடுங்கோளூர்.) சோழராஜாக்களின் இராஜதானி, உறையூர், கும்பகோணம், கங்கைகொண்டான் சோழபுரம். ஆதிதொண்டைச் சக்கரவர்த்திக்கு இராஜதானி, காஞ்சிபுரம். பாண்டியருக்கு இராஜதானி, மதுரை, கொறுக்கையாம்.

இதில், சேரனாலாளப்பட்டது-சேரமண்டலமென்றும், சோழனாலாளப்பட்டது-சோழமண்டலமென்றும், பாண்டியனாலாளப்பட்டது-பாண்டியமண்டலமென்றும்பெயராம்.

ஆதொண்டைச் சக்கரவர்த்தியின் பொருட்டு, குலோத்துங்க சோழனால் பாகித்துக் கொடுத்த வடசோழம்-தொண்டைமண்டலமென்று பெயராம். இது, இருபதுகாத வட்டமுள்ள நாடாம். மேற்படி தமிழ் நாடானது, நாலுமண்டலங்களாகப் பிரிந்திருக்கிறது.

இவர்கள்-தசாங்கம் வருமாறு.

திருவள்ளுவமாலை, சீத்தலைச் சாத்தனார்.

மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாரன்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பெயர் | சேரன் | சோழன் | பாண்டியன். |
| 2 | மலை | கொல்லி | நேரி | பொதிகை. |
| 3 | நாடு | குடநாடு | புனனாடு | தென்னாடு. |
| 4 | நதி | பொருநை | காவிரி | வைகை. |
| 5 | பதி | கருவூர் | உறையூர் | மதுரை. |
| 6 | முரசு | மங்களம் | வெற்றி | கொடை. |
| 7 | தமிழ் | இயல் | இசை | நாடகம். |
| 8 | கொடி | விற்கொடி | புலிக்கொடி | மீனக்கொடி. |
| 9 | ஊர்தி | கனவட்டம் | பாடலம் | கோரம். |
| 10 | மாலை | பனை | ஆத்தி | வேம்பு. |

இவர்கள்-நாட்டுக்குடிகளின் சிறப்பு.

இந்தியாவில், விந்தகிரிக்கு வடபாலுள்ளவர்கள் ஆரியர்களென்றும், தென்பாலுள்ளவர்கள் திராவிடர்களென்றும் பூர்வகாலமாக வழங்கப் பட்டிருக்கிற பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும் நான்குகுலருணங்களும், திராவிடர்களுக்குள்ளும் உண்டென்பதும், அவை முறையே-ஆதிசைவர்கள், 



மூவேந்தர்கள், வேளாளர்கள், தொழிலாளிகளென்பதுபாவர்களுக்கும் உடன்பாடேயாம்.

இவர்களில், ஆரியர் அனுஷ்டான சந்தியாவந்தனத்தில், அஷ்டாக்ஷரத்தை மூலமந்திரமாகக் கொள்வர். ஆதிசைவர், அனுஷ்டான சந்தியாவந்தனத்தில், பஞ்சப்பிரமமந்திரங்களையும், இருதயாஷ்டங்கங்களையும், ஸ்ரீபஞ்சாக்ஷரத்தையும் மூலமந்திரமாகக் கொள்வர். ஆரியர், நானே பிரமமென்பார். ஆதிசைவர், ஆண்டவனொருவனுண்டு. ஆன்மா, அவன் திருவடியடைய வேண்டுமென்பார். ஆரியர், ஆசிர்வாதஞ் செய்கையில், அட்சதைகொடுப்பார், ஆதிசைவர், விபூதிப்பிரசாதமளிப்பார்.

ஆதிகாலத்தில், கங்கைசூழ்ந்துள்ள காசிமுதலிய பிரதேசங்களில் வசித்துக்கொண்டிருந்த சாம்பவர்களாகிய ஆதிசைவர்களை, கங்கா ஸ்நானத்திற்காகச் சென்ற இராஜேந்திர சோழனும், குலசேகர பாண்டியனும் அழைத்துக்கொண்டு வந்து சோழமண்டலத்திலும், தொண்டைமண்டலத்திலும், பாண்டியமண்டலத்திலும் உள்ள சிவாலயங்களில் சதாபூஜித்து வரும்படியான சுதந்தரபாத்தியதை யுண்டாக்கி வைத்தார்கள். இதற்குப்பிரமாணம்.

திருவிளையாடற் புராணம், திருநகரங்கண்டபடலம்.

கைவரை யெருத்திற்கனவரை கிடந்தகாட்சியிற் பொலிந்தோளிர்கோயின், மைவரைமிடற்றுமதுரை நாயகனைமரபுளியருச்சனைபுரிவான், பொய்வரை மறையாகம நெறியொழுகும் புண்ணியமுனிவரையாதி,சைவரைக்காசிப்பதியினிற் கொணர்ந்து தலத்தினிற் றாபனஞ்செய்தான்.

இதனால், தமிழ்நாட்டரசர்கள், சிறந்த சிவபக்திவைராக்கியமுள்ள புண்ணிய சீலர்களாய்ச் செங்கோல் நடாத்திவந்தவர்களாகத் தெரிகிறது.

மேலும், சதாசிவமூர்த்தியால், தீக்ஷைசெய்யப் பெற்றவர்கள் ஆதிசைவவேதியர்கள்; அவர்கள், எல்லாவருணத்தாருக்குந் தீக்ஷானுக்கிரகஞ்செய்ய அதிகாரம் பெற்றவர்கள். இப்பிராமணர்கள், ஸ்தாபனாதி காரியங்களிற் சிரேஷ்டராகின்ற எல்லாவருணத்தாருக்கும், சிவதீக்ஷையால்அநுக்கிரகிப்

பதிலும், சிவாலயங்களில், பிரதிஷ்டை, உற்சவம், ஸ்தபனம், ஸம்புரோக்ஷணம், பிராயச்சித்தம், அபிஷேக முதலியவற்றை நடத்துவதிலும், சிவதருமங்களை வியாக்கியான ரூபமாக வெளிப்படுத்துவதிலும் அதிகாரிகளாவார்.

மனிதரிலுயர்ந்தோர்; ஆதிசைவப் பிராமணரென்றும், தேவர்களிற் சிறந்தோர் சிவபெருமானென்றும், விரதத்திலுயர்ந்தது, சோமவார விரதமென்றும், மந்திரத்திலுயர்ந்தது ஸ்ரீ பஞ்சாக்ஷரமென்றும் கூறியிருப்பது காண்க.

திருவிளையாடல்–மூர்த்திவிசேடப் படலம்.

மனிதரிலுயர்ந்தோராதி மறையவர்தேவர்தம்மிற்
பனிதருதிங்கள்வேணிப் பகவனேயுயர்ந்தோன் வேட்டோ
இனிதருள்விரதந்தம்மு ளதிகமாமிந்துவாரம் [ர்க்
புனிதமந்திரங்கடம்முட் போதவைந்தெழுத்துமேலாம்.

ஆதிசைவர், சப்தலிங்கத்துள் ஒருலிங்கமெனல்.

தரிசனவிதியிலும், அருச்சகரென்னும் ஆதிசைவப்பிராமணரையும், ஏழுலிங்கத்துளொன்றாகத் தரிசிக்கும்படி ஆகமவாக்கியம் ஏற்பட்டிருக்கின்றது.

இதற்குப்பிரமாணம்.

கோபுரே சிகரே துவாரே பிராகாரே பலிபீட்டகே
*அர்ச்சகே மூலலிங்கஸ்ய ஸப்தலிங்கஸ்ய தெரிசயேது.

இதன்கருத்து—கோபுரம், கருப்பக்கிருகத்தின் சிகரம், சிவாலயத்தின்வாயில், பிராகாரம், பலிபீடம், சிவார்ச்சனை செய்யும் அருச்சகர், சிவலிங்கப்பெருமான், ஆகிய இவ்வேழினையும் தரிசிக்கவேண்டும்.

அங்ஙனம் தரிசித்தபின்னர், சிவப்பிரசாதம் ஆதிசைவர் மூலமாகப் பெறவேண்டும்.

---

*அருச்சகர், இவரைப்பாண்டிநாட்டில் பட்டரென்பர், சோழநாட்டிலும், தொண்டைநாட்டிலும், குருக்களென்பர்.



அதீக்ஷிதராகிய ஆசிரியர்கள், அல்லது, ஸ்மார்த்தர்கள் பரார்த்த பூசையாகிய சிவாலயபூசை செய்யின், அவ்வூர் பஞ்சத்தாலழியும். இதற்குப் பிரமாணம்.

திருமூலர்-திருமந்திரம்.

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றன்னை யர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமா மென்றே
யேர்கொண்ட நந்தி யெனக் குரைத்தானே.

என்பதனால் உணர்க.

கம்பர்-ஏரெழுபது.

நிறைக்குரிய வந்தணர்கள் நெறிபரவ மநுவிளங்கத்
தறைக்குரிய காராளர் தமதுவரம் பினிதோங்க
மறைக்குரிய பூமனையும் வண்டுளபத் தாமனையும்
பிறைக்குரிய நெடுஞ்சடிலப் பெம்மானையும் பணிவாம்.

இதன்கருத்து-நிறைக்குரிய அந்தணர்கள் நெறிபரவ என அந்தணரை முதல் வருணத்தாரெனவும், மநுவிளங்கவென அரசரை இரண்டாம் வருணத்தாரெனவும், தறைக்குரிய காராளர் தமது வரம்பினி தோங்கவென வேளாளரை மூன்றாம் வருணத்தாரெனவும் முறையே வாழ்த்தியருளினார். இதனால், வேளாளர் மூன்றாம் வருணத்தாராகிய வைசியரென்பதே தேற்றம்.

இவர்-பூவைசியர், கோவைசியர், தனவைசியர் என மூவகைப் படுவர்.

காளத்திப்புராணம்-௧௧-வது அத்தியாயம்.

வணிகர்தஞ் செய்தி கூறின் மகவினை யாற்ற லோத
லுணர்வுடைப் பவர்க்குத்தான முதவல் வேளாண்மை போம்ப
றணிவில்வா ணிபத்தா லீட்ட லானினந் தழைப்பக் காத்த
றணிவுறு மிவைமற் றன்னோர் செய்வன தொகை யஃறுப்.

என்று இச்செய்யுளில், உழவாதி அறுதொழிலையும் வைசியர்க் குரியனவெனக் கூறியதுணர்க. மேலும், இவர்கள் பயிர் செய்து ஈட்டும் பலபண்டங்களையும், வெவ்வேறு சாதியார் வாங்கி விற்பினும், அவர்க்கெல்லாம் முதலில் விற்பனை செய்பவர் பயிரிடலைச் சுதந்தரமாகவுடைய வேளாளரே வைசியரென்பது திண்ணம்.

### வைசியர்—அறுதொழில்.

ஓதல் வேட்ட லுபகார மன்றியும்
வாணிபம் பசுக்காவ லுழவுதொழிலெனப்
புகன்றவை ஆறும் பூவைசியர் தொழிலே.

இதனால், பூவைசியராகிய வேளாளருக்கே வைசிய பட்டம் சித்தமாம்.

### வைசியர்-மூவகைச் சீவனத்தொழில்.

கோக்களைக் காத்தலு மாப்பொரு ளீட்டலு
மேர்த்தொழின் மூன்றும் வைசியர்தந் தொழிலே,

என்பது, பிங்கலந்தை நிகண்டாலுணர்க.

இம்முத்தொழிலுடையார், ஆரியத்தில் வைசியரென்றும், திராவிடத்தில் வேளாளரென்றுங் கூறப்படுகின்றனர்.

மேலும், ஆனிரையாதிகளுக்கு உணவாகியவைக்கோல், கொள்ளு முதலியவை யுதவலும், தானியம் விளைந்தகாலத்தில், பதினெண்குடி மக்களுக்குக் களவேள்வி செய்தலும், எலி எறும்பு காகம் பட்சுஷி முதலியவைகளும் உண்டுகளிப்பதால், சகல ஜீவராசிகளுக்கும் இவர்கள் உபகாரியா யிருத்தலைப் பற்றியும் வேளாளரென்று பெயர்வழங்கப்படுகின்றது.

### நாயனார்-குறள்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்பவர், எனவும்,



பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். எனவும்,

தமிழ்வேதங் கூறுகின்றன.

ஆகலின், வைசியராகிய வேளாளருக்கு முதன்மையான தொழில் கிருஷியேயாம். அக்கிருஷிக்குத் துணையாயுள்ளது ஆன்காத்தலாம். இவ்விரு தொழிலின் பயன்வாணிகமாம்.

### வைசியருக்குத்தருமம்.

| வைதிக விருத்தி. | இலௌகிக விருத்தி. |
| --- | --- |
| 1. வேதமோதல். | 1. பசுக்காத்தல். |
| 2 ஈதல். | 2 வியாபாரஞ்செய்தல். |
| | 3. வட்டியிட்டல். |
| | 4. பயிர்செய்தல். |

### வேளாளரே-வைசியர்.

வைசியருடைய அறுதொழிலை வேளாளரே செய்துவருகிறார்கள்:—

1. ஏருழுதல்-இதுவேளாளருக்கே உரியது.
2. பசுக்காத்தல்-இதுகிருஷிக்குரியகன்று காலிகளைப் பரிபாலித்தல்.
3. பொருளீட்டல்-இதுவியாபாரஞ் செய்தல்.
4. ஓதல்-இதுதமிழ்வேத மோதல், மந்திரஞ் செபித்தல்.
5 வேட்டல்-இது பூர்வகிரியை, அபரகிரியை காலங்களில், அக்கினி காரியங்களை முடித்தல்.
6. ஈதல்-இதுஅறஞ் செய்தல்.

### கவி.

உழவுவா ணிபத்தி னீட்டி யுறுபொருள் கொண்டி யாரும்
விழைவுறத் தம்பா லிர்க்கு மிருதியான் வசிய ராவார்
தழைதரு முபகா ரத்தாற் றரணி பிணித்த லாலும்
மழைநிகர் கொடைமை யாலு மற்றும் வேளாள ராவார்;
வைசியர் வேளாளரென்றும், காராளரென்றும்,
மேழிக்கொடி பதிபரென்றுங் கூறப்படுகிறார்கள்.

## வைசியர்களுக்கு ஆறுபெயர்.

அவை வருமாறு:—

| | |
|---|---|
| 1-இளங்கோக்கள். | 4-எட்டியர். |
| 2-மன்னர் பின்னர். | 5-காராளர். |
| 3-இப்பர். | 6-வேளாளர். |

### நிகண்டு.

இளங்கோக்கண் மன்னர் பின்ன ரிப்ப ரெட்டியர் காராளர்
வளம்பெறவாழ் வேளாளர் வைசியர்தம் பொதுப்பே ராறுங்
கிளந்த கோக் காத்தன் மற்றுங் கிளர்பொரு ளீட்ட லேரை
விளக்கவே யுழலான்மூன்று குலம்பெறும் வேறுசொல்வாம்.

### வேளாளரியல்பு பத்து.

அவையாவன:—

| | |
|---|---|
| 1-ஆணைவழி நிற்றல். | 6-ஓவா முயற்சி. |
| 2-அழிந்தோரை நிறுத்தல். | 7-மன்னிறை தருதல். |
| 3-கைக்கட னாற்றல். | 8-ஒற்றுமை கோடல். |
| 4-கசிவகத் துண்மை. | 9-விருந் தோம்பல். |
| 5-ஒக்கல் போற்றல். | 10-திருந்திய வொழுக்கம். |

இவ்வியல்பு பத்தையும்வேளாளர் அநுஷ்டித்துவருகின்றனர்.

### வேளாளர் கங்கையினிடத்தி லுற்பவம்.

கைலையங்கிரியில், சிவபெருமானுடன் உமாதேவியார் ஓர்காலத்தில் தனித்திருந்தபோது, சுவாமியை நோக்கி தேவியார் உலகினில் ஒளியை விளக்கும் சூரிய சந்திரர்கள் யாவரென்று வினவுதலும், சுவாமிகள் நமதிருகண்களெனக் கூறினர். அங்ஙனமாயின், சுவாமிகள் கண்களை மூடின் உலகமெல்லாம் இருளடையுமோவெனலும், சுவாமிகள் ஆம் எனக் கூறினர். தேவியார் புன்னகை கொண்டு, இதனை ஒருதிரு விளையாடலாகநினைத்து, சுவாமிகளின் கண்களைத்தமதுதிருக் காத்தாற் பொத்தினர். உடனே உலகெங்கு மிருளடைந்து சகலஜீவராசிகளும் கண்ணொளி யிழந்திருந்தார்கள்.



பின்னர், பிரமவிஷ்ணு வாதிதேவர்கள், தத்தம் தொழிலை நடத்தமுடியாமல், சிவபெருமானைக்குறித்து தியானித்து வருந்தினார்கள். சுவாமிகள் இரக்கமுற்றவராய்த் தமது திருக்கண்களைத் திறந்தார். கோடிசூரிய ருதயமானாற்போலப் பிரகாச முண்டாயிற்று. இதனைக்கண்ட உமாதேவியார், பயந்து சுவாமிகளது கண்களிற் பொதிந்துள்ள தமது இருகரங்களையும் எடுத்தருளினர். சுவாமிகளது கண்களின் வெப்பம் தேவியாரது கராம்புயங்களில் தாக்கிய மாத்திரத்தில், சல சலவென்று வியர்வையுண்டாகிப் பிரளயகாலத்தைப் போலும் பிரவாகமாகக் கங்கை ஆரவாரித் தெழுந்தது. அக்கங்கையிடத்துச் சிவபிரான் திருவருளால் வேளாளர்கள் தோன்றி, உமாதேவியையும், சிவபெருமானையும் சூழ்ந்திருந்தார்கள்.

(கங்கை என்பதற்கு, கம்-கைஎன இரண்டு பதங்களாகப் பிரித்து, அவற்றுள், கை-உமாதேவியார் கையினிடத்துண்டாகிய, கம்-சலமெனப் பொருள்கொள்க.)

அப்பால், அந்தக்கங்கைப் பிரவாகமானது, உலகினையழிக்குமென்றஞ்சி தேவாதிமுனிவர் முதலியோர் சிவபெருமானைப் பிரார்த்திக்க, சுவாமிகள் அவ்வெண்டு கோளுக்கிரங்கித் தமது சடாமகுடத்தில் தரித்தருளினர். அதனால், அவருக்கு கங்காதரரென்றும், வேளாளர் கங்கையினிடத்துப் பிறந்தமையால், அவர்களுக்குக் கங்காபுத்திர ரென்றும், கங்காகுலத்தவ ரென்றும் பெயர் வழங்கப்பெற்றிருக்கின்றனர்.

### கம்பர் - ஏரெழுபது, பாயிரம்.

கங்கைபெறுங் காராளர் கருவியெழு பதுமுரைக்க
வங்கைபெறும் வளைத்தழும்பு முலைத்தழும்பு மணியமலை
மங்கைபெறுந் திருவுருவாய் வந்துறைந்தார் தவமலஞ்செய்
கங்கைபெறுந் தடவிகடக் களிற்றினைக் கழல்பணிவாம்.

### கங்கைபுராணம் வேளாளர் உற்பவச்சருக்கம்.

மஹாதேவ சிரோகங்கா மோக்ஷார்த்தி சகாரந்தகா
பூமிபாலன கர்த்தவ்யம் கங்காபுத்ரா ச்சகர்மண
வம்சோத்பவந்து புத்ராணம் விஷ்ணுபாதஜ லோத்பவம்
கங்காபுத்ர விவாஹேச கல்யாணம் மங்களம் சுபம்.

என்று

ஆதிகாவியம் என்னும் கிரந்தத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

திருக்கைலையி லிருந்து, உமாதேவியார் காஞ்சியிற்றவம் புரிய வந்தகாலத்து தன்னோடு சூழ்ந்துவந்த பிள்ளைகளாகிய வேளாளருக்குத் தான் சிவபெருமானால் கொடுக்கப் பெற்று வந்த இருநாழி நெல்லில்; சிறிது நெல்லளித்து அதை யுழவு தொழிலாற் பெருக்கி முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கும்படி கட்டளையிட்டருளினார்.

மேற்சொல்லிய அவ்வறங்களில், பசுக்களைக் காத்தல் வேளாளருக்கே முக்கிய தருமமாயிருத்தலால், அவைகளைப் போஷித்துப் பூசித்துவர வேண்டும். அதனால், அவ்வினங்கள் பெருகும். பெருகவே கிருஷி இடையூறின்றி நடக்கும் அக்கிருஷி நடப்பதால், உலகின்கண் பல அறங்களும் செவ்வனே நடைபெற்று வரும். இதற்குப் பிரமாணம்.

## முப்பத்திரண்டு அறங்களாவன.

### நேரிசை ஆசிரியப்பா.

1 ஆதுலர்க் கடையச் சாலை யமைத்தலும்
2 ஓதுவார்க் கருங்கலை யோதுவித் தோதுநர்க்
குறுசுவை யூணுடை முதலிய வுதவலும்
3 அறுசம யத்தோர்க் கன்ன மளித்தலும்
4 பசுவுக் குணவிட்டுப் பாது காத்தலும்
5 சிசுவுக் குப்பால் தெளிமருந் துதவலும்
6 சிறைப்பட் டோர்க்குத் தினவூ ணளித்தலும்
7 அறச்சோ றிரப்போர்க் கழைத்துக் கொடுத்தலும்
8 விளைபய னனைத்தையும் விழைந்துணக் கொடுத்த [லும்
9 களைகணற் றோரைக் காத்தினி தோம்பலும்
10 ஆதர வற்ற பிள்ளைகட் கருத்தித்
தீதற வளர்த்துச் சிறப்புற வுய்த்தலும்
11 அநாதி யாயுயி ரகன்ற களேபரந்
தனதென வெடுத்துத் தகனஞ் செய்தலும்
12 ஏழைமை மணத்துநல் லியங்கலிப் பித்தலும்
13 கோழடை பாகுசுண் ணத்தொடு கொடுத்தலும்
14 பிணிப்பட் டோர்க்குப் பெறலரு மருந்து
தணிப்பி லன்பொடு தந்திரட் சித்தலும்



15 கலியற் றோர்க்கு பாகடைத் தூசினை
யொலித்துக் கொடுக்க வண்ணா னுதவலும்
16 தலைமயிர் கழிக்கத் தருபொரு ளிலர்க்கு
விலைதந் தேமயிர் வினைஞனை யுதவலும்
17 முன்னுற முகந்தெரி கண்ணாடி கொடுத்தலும்
18 கன்னியர்க் காதணி யோலை கொடுத்தலும்
19 கண்ணோ யகற்றுங் கண்மருந் துதவலும்
20 எண்ணெய்ப்பிண் ணாக்குத் தலைக்கிட வீதலும்
21 காம சத்திரங் கட்டி நடாத்தலும்
22 எமமா யிடர்ப்பட் டோர்குறை யிருத்தலும்
23 நெடுவழிச் செல்வோர் விடாய்க்குநீர்ப் பந்தரும்
24 படுபசி தீர்க்கப் பாலூண் மடமும்
25 ஊர்தொறுஞ் செல்லற் குருநன் னெறியும்
26 சேர்பவர் வெம்மை தெறுநிழற் சாலையும்
27 மக்கள் விலங்குபுள் ளாதிய மன்னுயிர்
தொக்கமர் தண்ணிழற் சோலை யமைத்தலும்
28 பெற்ற முரிஞ்சப் பெருங்கன் னாட்டலும்
29 மற்றை யுயிர்க்கும் நீர்நிலை வகுத்தலும்
30 ஆவினஞ் சூல்கொண் டருங்குலம் பல்கச்
சேவினம் வளர்த்துத் தேவர்க்கு விடுதலும்
31 கொல்லப் படுமுயிர்க் குறுவிலை கொடுத்தே
யொல்லையின் மீட்டவற் றுயிர்ப்பிழைப் பித்தலும்
32 கைப்பொரு ளில்லாக் காளையைக் கன்னியை
மெய்ப்படு நன்மண விதியிற் புணர்த்தலும்
இன்னவா முப்பா னிரண்டென விதந்து
சொன்ன வறங்களின் றொகையுந் துறவும்
வேந்துயர் கொடையும் விதிச்செங் கோலும்
ஆய்ந்துயர் கலைகளு மமரர்தஞ் சிறப்பும்
வழுவில் வாணிகப் பயனும்
உழுநர்தந் தொழிலி னுண்டா வனவே. என்று

கூறிய செய்யுளா லுணர்க.

## கோமகிமை விளக்கம்.

தேவலோகத்திற் சிறந்து விளங்கும், காமதேனுவின்குலமாகிய பசுவானது, எல்லா சீவராசிகளிலும், மேன்மை பெற்றுள்ள புண்ணிய வடிவமாய்விளங்கி யாவரையும் யாதருள்

தானமாயிருந்து உபகரித்துவருகின்றது. அதன் திருமேனி முழுதுந் தேவதாசொரூபமாயிருக்கும். அதன் கொம்பினடியில், பிரம விஷ்ணுக்கள். அதன் கொம்பினுனியில், காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங்கள், அதன் சிரசில், சிவபெருமானும், நெற்றியில், சிவசத்தியும். நாசியில், சுப்பிரமணியரும். காதுகளில், அசுவனி தேவரும். கண்களில், சந்திரசூரியரும் நாவில், வருணனும். குரலில், சரஸ்வதியும். மார்பில், கந்தருவரும். கழுத்தில், இந்திரனும். முதுகில், உருத்திரரும். குறியில், சத்தமாதர்களும். குதத்தில், இலக்குமியும். கங்கை, மூத்திரத்திலும். வயித்தில், பூதேவியும். யமுனை, சாணத்திலும். முலையில், திருப்பாற்கடலும் வயிறு, முகம், இதயம், என்னும் உறுப்புகளில், யாகாக்கினியும். உடம்பில்; அருந்ததி முதலிய கற்புடையோரும், கால்களில், வேதங்களும். வாலில், பஞ்சாக்ஷரமும். அமைந் திருப்பதாக சிவதருமோத்ரம் கூறுகின்றன. அன்றியும், சிவபெருமானுக்கு அபிஷேகஞ்செய்ய போக்கியமான பால்முதலிய பஞ்சகவ்யங்களைக் கொடுப்பதோடு, திருவெண்ணீற்றின் காரணமான திரவியம் உண்டாவதற்கும் அது, இடமாயிருக்கின்றது. மேலும், கருமமும், ஞானமும், கண்களாகவும். ஆகமங்களும், சாத்திரங்களும், கொம்புகளாகவும், தருமமே, உடலாகவும். தவமே, நடையாகவுங்கொண்டு பரமேசுரனுக்கு வாகனமாக விளங்கிய தருமவிடைக்கு இனமாகவும் இருக்கின்றது. இவ்வித மேன்மையுடைய பசுக்களை நீராட்டி தக்ககொட்டகையில் பயபக்தி விசுவாசத்துடன் கிருஷித் தொழிலுக்குரிய பூவைசியராகிய வேளாளர், பாதுகாத்துப் புண்ணிய காலங்களில் பூசித்து வருவாராகில், சதா சுகவாழ்வைப் பெற்று விளங்குவர்.

## திருக்கைவழக்கம்.

உளன்காக்கு மாவிக் குறுதியுழவா மதற்கா
யான்காப்பே காப்பாக வாளுங்கை, என்றும்,

கம்பர்கூறியது காண்க

## வைசியர்-ஈகை.

ஆரியத்தில், வைசியரென்பதைத் திராவிடத்தில் வேளாளரெனக் கூறுவர். வேளாளரென்பது-உபகாரிகளென்பதாம்.

புரவல னீகை யாளன் போற்றும் வேளாளன் றியாகி
யுரைசெழு வேளவியாள னுபகாரி கொடை யுளோனும்



Y592.C

வரைவறைக் கொடுத் தளிப்போன் வள்ளியோனென்றும்
மிரவலன் பரிசி லாளன் யாசகன் றீன னேற்போன். [கூறு

என்னுஞ் சூடாமணி நிகண்டாலறிக.

இதனால், வேளாளரென்பது காரண இடுகுறிப் பெயராயிருத்தலின், ஈதல் என்பது, அவ்வருணத்தாருக்குக் கூறு தமையும். இதனாலன்றோ திராவிட வேதமாகிய நாயனார் குறளில்,

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்.

என்னுஞ் செய்யுள் கொடுக்கப்படுவோர் கொடையெல்லாம், வேளாளர்கொடையின்கீ ழடங்கிய தெனக் கூறுகின்றது.

## ஏரெழுபது.

பார்வேந்தர் பெருஞ்செல்வம் பழுதுபடா தொருநாளும்
பேர்வேந்தர் பெருஞ்செல்வ மழிவுபடா திருந்ததினாற்
றேர்வேந்தர் போர்க்களத்துச் சிலர் வெல்வர் சிலர்தோற்ப
ரேர்வேந்தர் போர்க்களத்து விரப்பவருந் தோலாரே.

இதனால், அரசன் யுத்தஞ் செய்யுங்காலத்து, அவன் போர்க்களத்தில் சிலர் வெற்றிபெறினும் சிலர் தோற்பார். வேளாளரது போர்க்களத்தில் வந்த யாசகரும் தானம் பெறுதலால், வெற்றிபெறுவர் எனவே எல்லாரும் பயனையடைவரென்பதாயிற்று.

## வேளாளர், என்பதன் பதப்பொருள்.

வேள் = நன்னிலம், ஆளர் = ஆள்பவர். அதனை மருதநிலத்தை கிருஷியால் வளப்படுத்தி யாள்பவரென்பதாம்.

வேள் = நன்றி, ஆளர் = ஆள்பவர் எனவே நன்றியாளர்.

வேள் = விருப்பம், ஆளர் = ஆள்பவர் எல்லாரும் தன்மைவிரும்பச் செய்பவர்.

வேள் = ஆண் மகன், ஆளர் = ஆள்பவர் எனவே இளங்கோக்களாய் அரசாண்டவரும், மன்னர் பின்னரென மந்திரி, பிரதானி, சேனாதிபதி, தானாதிபதியா யிருந்தவரும், குடியரசுகாலத்து முதன்மையா யிருந்தவரும், காணியாளராயிருந்தவரும், நாட்டாண்மை பெற்றுப் பதினெண் குடிகளையும் வசப்படுத்தி யாண்டவரு மிவரென்பதாயிற்று.

வேள் = ஈகை, ஆளர் = ஆள்பவர், ஈகையாளர் கொடையாளருமென்பதாம.

224501

வேள் = சத்தியம், ஆளர் = ஆள்பவர் எனவே சத்தியவந்தாரம்;

"மெய்மையுங் கொடையும் வேளாண்மையாகும்."

என்பது பிங்கலந்தையிற் காண்க.

வேளாண்மையர் = அரசரால் விரும்பப்படுந்தன்மையும் ஆண்மையர் = வீரத்தையு முடையார். எனவே மந்திரித்தலைமை, சேனைத்தலைமை என்னும் ஆண்மைபூண் டொழுகுவார் என்பதாம்.

வேளாண்மை = உபகாரம். அதைச்செய்பவர் வேளாண்மையர்.

## திருக்குறள்.

தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

வேள்வியாளர் = களத்தில், நெற்கதிரைத் தேவர், அந்தணர், தொழிலாளி முதலியவர்களுக்கு வழங்குவதால், "களவேள்வியையும்" வேதமோதலாற் பிரமவேள்வியையும், அக்கினி காரியாதி செய்வதால் தெய்வவேள்வியையும், சிராத்தாதி செய்வதால் பிதர்வேள்வியையும், அதிதிகளுக்கு அன்னமிடுவதால் மானுஷவேள்வியையும் ஆக "ஐம்பெரும்வேள்விகளையும்" செய்வதால், வேளாளர்களுக்கு வேள்வியாளரென்றும் பெயராம்.

வேள்வி = அருச்சனை, ஆளர் = செய்பவர். அருச்சனையாகிய சிவபூசை செய்பவரென்பதாம்.

வேளாண்குடி என்பது = வேளாண்மைக்குரிய குடிப்பிறப்பின ரென்பதை விளக்குவதாம்.

இவ்வேளாளர்களின் தொழிலானது, சாதாரணத்தில் பயிர்த்தொழிலாம். இத்தொழிலில மற்றவர் தொழிலைப்பார்க்கிலும் மிஞ்சியிருப்பார்கள். இவர்களில், பலர் மிராசுதாரர்களாக விருப்பார்கள். இராஜாங்க உத்தியோகத்தி லிருப்பார்கள். கிராமமுனிசீப், கணக்குவேலையிலு மிருப்பார்கள். சிலர் வியாபாரமுஞ் செய்வார்கள். இழிவான தொழிலைச்செய்ய உடன்படார்கள். பயிர்த்தொழிலையும் பண்ணையாட்களைக் கொண்டு செய்வார்கள். இது பிரசித்தம்.

### ஏரெழுபது - வேளாளர் சிறப்பு.

தொழுங்குலத்திற் பிறந்தாலென் சுடர்முடிமன் னவராகி
எழுங்குலத்திற் பிறந்தாலென் னிவர்க்குப்பின் வசியரெனுஞ்



செழுங்குலத்திற் பிறந்தாராய்ச் சிறப்புடையா ராய்வாய்மை
யுழுங்குலத்திற் பிறந்தாரே யுலகுய்யப் பிறந்தாரே. என்றும்;

### பயிர்விளைவின் சிறப்பு.

ஏராலே சேறுக்கி யெருவாலே கருவாக்கி
நீராலே பைங்கூழை நிலைப்பிப்பார் தமையன்றி
காராலே காவேரி நதியாலே காசினியில்
ஆராலே பசிதீர்வா ரகலிடத்திற் பிறந்தோரே. என்றும்;

### பயிர்வளருஞ் சிறப்பு.

சீர்வளரு மறைவளருந் திறல்வேந்தர் முடிவளரும்
பேர்வளரும் வாணிபத்தும் பெருநிதிய மிகவளரும்
ஏர்வளருந் திருவளரு மிசைவளருங் கடல்சூழ்ந்த
பார்வளருங் காராளர் பயிர்வளருந் திறத்தாலே.

என்றும்;

### உமாபதிசிவாச்சாரியாரருளிய
### சேக்கிழார் புராணம்.

காராள ரணிவயலி லுழுது தங்கள்
கையார நட்டமுடி திருந்த விந்தப்
பாராளுந் திரளரசர் கவித்த வெற்றிப்
பசும்பொன்மணி முடிதிருத்துங் கலப்பை பூண்ட
ஏராலெண் டிசைவளர்க்கும் புகழ் வேளாள
ரோடிக்குஞ் சிறுகோலாற் றாணியாளச்
சீராரு முடியரச ரிருந்து செங்கோல்
செலுத்துவர் வேளாளர் புகழ் செப்பலாமோ.

என்றும்;

### திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளருளிய
### திருஆக்கூர், தேவாரப்பதிகம்.

வாளார்கண் செந்துவர்வாய் மாமலையான் றன்மடந்தை
தோளாகம் பாகமாப் புல்கினான் றொல்கோயில்
வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந்
தாளாள ராக்கூரிற் றான்றோன்றி மாடமே. என்றும்;

மேற்கூறிய செய்யுட்களாலு முணர்க.

எப்போதும் வேளாளர், நெற்பயிர் அறுவடை செய்த பின்பு, போர்க்களத்தில் வந்து தமது பண்ணையாட்களை நாடறியக் கூவியழைத் தவர்வந்தெதிர்நிற்க, முதலில், அரசனுக்குப் பகுதிசெலுத்திப் பின்பு, கிராமதேவி, பிள்ளையார்கோவிலுக்குத் தருமமும், புரோகிதர், பாவலர் முதலியவர்களுக்குத் தானமும், கிராமத்தொழிலாளிகளுக்கு மேரையும், அதிதிகளுக்குப் பிச்சையுங் கொடுத்து மீதியைத்தாங்க ளனுபவித்துக் கொள்வது வழக்கமாயிருக்கிறது. ஆதியிலே, வேளாளர்களுக்கு ஏவற்பணிவிடை செய்யப் பதினெண்குடிமக்களை அரசர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதற்குப் பிரமாணம்,

கம்பர்-ஏரெழுபது.

*நாவலோ நாவலென நாடறிய முறையிட்ட
ஏவலோர் போர்க்களத்தி லெதிர்நிற்பர் முத்தமிழ்தேர்
பாவலோ ரிசைவல்லோர் பற்றுடைய பதினெண்மர்
காவலோ ரெல்லாருங் கையேற்கும் பொருட்டாலே.
என்றும்,

## கச்சியேகம்பராலயசிலாசாசனம்.

ஆசிரியவிருத்தம்.

தொண்டைமண்டலவரிசைமூவா றுகுடிமக்கள்
சுருதிநாள்முதலாகவே
துங்கமிகுநாவிதன்குயவன்வண்ணானுலை
சொன்னபடியெழுதுமோச்சன்
கண்டகம்மாளர்வகையைவர்வாணிபர்மூவர்
கந்தமலர்மாலைகாரர்
கலைமீதுசாரடோட்டுபாணன்றலைக்கடைக்
காவல்புரிபள்ளிவலையன்.
பணமுறை[illegible]ங்குமிடையன்விருது
பலகூறுவீரமுடையான்
பதினெண்மர்குடிமக்களனைவருங்காராளர்
பணிசெய்துபலமுறைமையுங்

* நாவல்—என்பது, பண்ணையாட்கள்.



கொண்டுபெரிவட்டமுங்கட்டியேவருவரிக்
குவலயமதிக்கவேதான்
கூறியகச்சிவாழேகம்பாலயக்
குமுதத்திலிட்டலிபியே. என்றும்,

கூறியதனாலுமுணர்க.

திருவள்ளுவநாயனார்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

என்னுங்குறளால், கிருஷித் தொழிலினராகிய வேளாளர் ஒரே நிலைமையில் வாழ்ந்து வருபவரென்றும், மற்றவரெல்லாம் அடுத்து சீவிக்கும் சூத்திரரென்றும் விளக்கியருளினார்.

பூர்வகாலத்தரசர்களால், தொழிலாளிக்குள்ளே இன்னாரின்னார், இன்னவேலை செய்கிறதென்று விதிக்கப்பட்டு, இக்காலத்தும் நடந்துவருகின்றது. அந்தணர், அரசர், வைசியராகிய வேளாளருக்கு ஏவல்செய்வோர்கள் சூத்திரரென்பதற்குப் பிரமாணம்,

## சூடாமணி நிகண்டு.

சூத்திரர்.

இந்தமுக் குலத்து ளார்க்கே யேவல்பூண் டொழுகு கின்ற
வெந்திற லாளர் தாமே விதித்தசூத் திரரென் றுகுந்
தந்தநா லுரைத்த வாறே சாற்றின மிவர்க டாமே
யுந்திய தொழிலுக் கெல்லா முரியவர் தெரியுங் காலே.
என்றும்,

## நல்லாபிள்ளைபாரதம்-சாந்திபருவம்.

சூத்திரர் - தருமம்.

இத்திறத்தவர் மூவரு முளமகிழ் வெய்த
வத்திறத்தவ ருந்தொழில் செய்வதே யறனுங்
கைத்திறற்கொரு வருநிக ரற்ற காவலகேள்
வித்தகத்தவிச் சூத்திரர் தங்குல மேன்மை. என்றும்,

## திருக்காளத்திபுராணம்.

### சூத்திரர்.

பின்னவர் செப்பி பேசின் பீடுசொன் மறையோ ராதி
முன்னவர் மூவர் தம்மை முறையி னாதரித்தல் மூவர்
சொன்னவை முடித்த லென்றுந் துாங்கி விதியி னீட்டி
அன்னதை யறத்தி னீத லவர்க்குமுத் தொழிலு மாமே.

என்றுங் கூறியதனாலு முணர்க.

### வேளாளர் ஆண்ட குடியரசும்,

அவர்கள் தசாங்கமும், அவர்களை இளங்கோக்கள் என வழங்குதற்குப் போந்த காரணமாயிருப்பனகாண்க. மூவேந்தரால் வேளாளருக்குக்கொடுத்துவந்த மந்திரியுத்தியோகம். அநபாய சோழமகாராசன்பால், சேக்கிழார்சுவாமிகள் அவ்வுத்தியோகம் பெற்று உலகெலாம் புகழ நடத்திவந்தமையும், தாயுமான சுவாமிகள் அவ்வுத்தியோகத்தை வகித்து நடத்திவந்தமையும், யாவராலும் போற்றிப்புகழ்ந்து சிறத்தவல்லதாம். அதனை அவ்வவர் சரித்திர ஆராய்ச்சியினாற் றெளிந்திடுக.

அன்றியும், தற்காலத்தில், தென்னாட்டிலிருக்கும், சமஸ்தானங்களிலும், புராதன அரசர்வழக்கத்தை அனுசரித்து திவானுத்தியோகம், தானாதிபதியுத்தியோகா, வேளாளர்களுக்கே கொடுத்து வருதலும் இதனை சிறந்த ஓர் சான்றாகும்.

### வேளாளர் தசாங்கம் வருமாறு.

1. பெயர்-வேளாளர்.
2. மலை-மகமேரு.
3. ஆறு-கங்கை.
4. நாடு-எழுபத்தொன்பது.
5. நகரம்-ஆயிரத்துத்தொளாயிரம்.
6. ஊர்தி-ஐராவதயானை, உச்சைச்சிரவக்குதிரை.
7. மாலை-செங்குவளை.
8. கொடி-பேழி, குயில், சிங்கம்.
9. படை-அலப்படை.
10. முரசு-கொடை, முரசு.

இந்த தசாங்கமானது, அரசர்களுக் குரியது போலவே! இளங்கோக்களாகிய வேளாளர்களுக்கும் உண்டென்பதறிக,



### வேளாளர் சேனாதிபதியாயிருந்தது.

இந்த வுத்தியோகத்தை வேளாளரே அரசரால் கொடுக்கப்பெற்று நடத்திவந்தன ரென்பதைப் பெரியபுராணத்திற் கூறப்படும், வேளாளரான கோட்புலிநாயனார், ஏயர்கோன் கலிக்காம நாயனார், கலிப்பகை நாயனார், மானக்கஞ்சாறநாயனார் சரித்திரங்களாற் றெளிக. இதற்குப் பிரமாணம்.

### பெரியபுராணம்-மானக்கஞ்சாறநாயனார்.

அப்பதியிற் குலப்பதியா யரசசே னாபதியாம்
செப்பவருங் குடிவிளங்கத் திருவவதா ரஞ்செய்தார்
மெய்ப்பொருளை யறிந்துளார் விழுமியவே ளாண்குடிமை
வைப்பனைய மேன்மையினார் மானக்கஞ் சாறனார்.

என்பனபோலவே? மந்திரி உத்தியோகமும் வேளாளரே வகித்துள்ளாரென்பதை மன்னர்பின்னோரெனவழங்கும் வழக்கிற்குப் பிறிதுமோர் காரணமாயிருத்தல் காண்க.

இடையிரு வகையோ ரல்லது நாடிற்
படைவகை பெறா ரென்மனார் புலவர்.

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாற் குறிப்பிக்கின்றன. இவ்வாக்கியம், இடைப்பட்ட இருமரபினரானசூத்திரியரும், வைசியவேளாளருமே சேனாதிபதி உத்தியோகத்துக்குரியரென நாட்டுதல் காண்க. மற்றைய அந்தணர், சூத்திரருக்கு அஃதுரியதன்றாமென விலக்குதலுங்காண்க. மற்ற நாயன்மாருள்ளும் வேளாண் மரபினர் பாரம்பரையாக இச் சேனாதிபதி உத்தியோகத்தைவகித்தே வந்திருக்கிறார்களென்றறிக.

### வேளாளர் - முடிசூட்டல்.

### சோமசுந்தரபாண்டியற்குமுடிசூட்டல்.

### திருநெல்வேலித்தலபுராணம்-பட்டாபிஷேகச்சருக்கம்.

ஆயபங்குனியுத்திரநாளதிலமுதவோரையிலன்பாய்த்
தாய்பரம்பரைபாங்கர்நெல்வேலிவாழ்தற்பார்முடிமீதே
நேயமோடுழவன்றாமாலயனிந்திரன்முனிவோர்க
ளேமாமணிமுடியினைச்சூட்டினர்சொரிந்தனர்மலர்மாரி.

## ஸ்ரீராமருக்குமுடிசூட்டல்.

### கம்பராமாயணம்

அரியணை யனுமன் றாங்க வங்கத னுடைவா ளேந்தப்
பரதன்வெண் குடை கவிக்க விருவருங் கவரி வீச
விரைசெறி குழலி யோங்க வெண்ணெயூர்ச் சடையன் றங்கண்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

என்றும்,

## கரிகாலச்சோழனுக்குமுடிசூட்டல்.

### சோழமண்டல சதகம்.

கண்டன்கரி காலனுக்கு முடிகவித்துக் காணிபடைத்
தோருந், தொண்டைநாட்டி னற்குடியாய்ச் சூழவமைந்த
தூயோரும், பண்டுமநுநீ தியைத்தொடுத்துப் பயின்றவருஞ்
சோழியரெனவே, மண்டுகீர்த்தி படைத்தோரும் வளஞ்சேர்
சோழ மண்டலமே. என்றும்,

## தொண்டையானுக்குமுடிசூட்டல்.

### தொண்டைமண்டல சதகம்.

வெல்லாமல் வென்றநற் சந்தனக் காட்டத்தின் மேலிருந்து
நல்லாரை நந்திக் கலம்பகங் கேட்டபி னற்றனைக்குக்
கொல்லா புரிச்சந் திரன்முடி சூட்டக் குடைகவித்து
மல்லார் புரித்தொண்டை மானென துந்தொண்டை மண்டலமே.

என்றும்,

### கம்பர் திருக்கை வழக்கம்.

மங்கையொரு பாகருக்கும் மன்னவற்கு மாதவற்குந்
துங்கமணி முடியைச் சூட்டுங்கை.

என்று கூறிய செய்யுட்களால், அம்பிகை பாகருக்கும், அரசருக்கும் முடிசூட்டுவார் வேளாளரே யென்பது காண்க.

### ஏரெழுபது.

தென்னன்முடி சேரன்முடி தேங்குபொன்னி நாடன்முடி
கன்னன்முடி கடல்சூழ்ந்த காசினியோர் தங்கண்முடி



பின்னமுடி யன்றியுமற் றெடுத்துரைந்த முடிகளெல்லா
மன்னுமுடி வேளாளர் வயலின்முடி கொண்டன்றே.

என்று கம்பர் கூறியதனாலுமறிக.

## உமாபதிசிவாச்சாரியாரருளிய

### சேக்கிழார் புராணம்.

மனிதரிற் றேவ ராதலின் முதலாம்
வருணர்தா மையரே யாதி
இனியபே ரதுவும் வேந்தர்மண் விளக்கு
மியற்கையா னிராஜரே யெனவும்
புனிதசீர் காம பீடத்தெம் மன்னை
புதல்வராய் நென்முதல் பெற்றுத்
தனியற மதலை யாதலான் வேளாண்
டலைவர்தாம் பிள்ளையே யென்றும்.

கூறியதற் கிணங்க,

## வேளாளருக்குப் பிள்ளைபட்டம்.

சிவனருளால், கங்கையினிடத்துண்டான வேளாளர்களைப் பிள்ளைகளே என்று உமாதேவியார் அழைத்ததனால், தாயிட்ட பெயரை ஊரிட்டழைக்கு மென்னும் பழமொழிப் படியே, எப்போதும் சிறப்புப்பெயராய், கருப்பத்திலும், பிறந்தகாலத்தும், இறந்தகாலத்தும், பிள்ளை யென்று வழங்குவதுபோலவே? எவ்வளவு வயதுசென்றகிழவனாகிலும்விவாக காலத்தில் மாப்பிள்ளை வந்தார், மாமியார் வீட்டிற்கு மருமகப் பிள்ளை வந்தாரென்றுங் கொண்டாடி வருகிறார்கள். ஏனைய வருணத்தார் பிள்ளை யென்பதை சீரிடுங்காலந்தவிற, மற்றகாலத்தில் தத்தமக்குரிய பட்டப்பெயரா லழைக்கப் படுகிறார்கள்.

சிவனருட்குமாரர்களாகிய விநாயகருக்கு மூத்தபிள்ளையார், முருகக்கடவுளுக்கு இளையபிள்ளையார், திருஞானசம்பந்தப்பிள்ளையார், சேய்ஞலூர்ப் பிள்ளையார், சுவேதவனப் பிள்ளையார், பட்டினத்துப் பிள்ளையார் எனப்பெயர் வழங்கப் பட்டு வருவதைப் புராணங்களாலுமறிக.

## வேளாளருக்கு முதலியார்ப்பட்டம்.

பூர்வம், திருக்காஞ்சி நாட்டில் குடியரசாயிருந்தகாலத்தில், அக்குடியரசுக்கு வேளாளரைத் தலைவராகக் கொண்டு அவருக்கு முதன்மையாரென்னும் பட்டப்பெயரை குடிகளால் கொடுக்கப்பட்டது, அதனால், நிகண்டில்-சிற்றரசரென்பதற்கு, இளங்கோக்களென்றும், அரசருக்கடுத்தவராகையால், மன்னர் பின்னோரென்றும் வேளாளரைக் கூறியிருக்கின்றன.

ஆதிதொண்டைச் சக்கரவர்த்தி காலத்தில், தொண்டைமண்டலத்தில் பிறதேசத்திலிருந்து வேளாளரைக் கொணர்ந்து குடியேற்றிநாட்டாண்மைக்கொடுத்து, அவர்களால், மற்ற குடிகள் செய்யுங் குற்றத்தை விசாரிக்க முதன்மையாக்கி முதலியார் என்னும் பட்டமுங் கொடுக்கப்பட்டதாம்.

இதற்குப் பிரமாணம்.

கதலிதொண்டைக் காவலன் காமுறு மக்கட்குண்
முதலியெனப் பேர்படைத்த முன்னை,

என்று கம்பர்கூறிய திருக்கைவழக்கத்தானுங்காண்க.

அநபாயச் சோழனது காலத்தில், வேளாளராகிய சேக்கிழார் பெரிய புராணஞ்செய்து சிதம்பரம் ஸ்ரீ நடராசப்பிரபுவின் சந்நிதானத்தில் அரங்கேற்றினார், அதைக்கேட்டு சிரவணாநந்தங் கொண்ட அச்சோழமகாராசன் சேக்கிழாரை "எம் முதலியோ" இவர் எனத்தழுவிக்கொண்டான். அன்று முதல், சேக்கிழாருக்கும், அவர் குலத்தாருக்கும் முதலியார்ப் பட்டம் வந்ததாகக் கூறுகிறார்கள். முதலி = முதன்மையாந் தலையுடையவன் என்பதாம். இதற்குப் பிரமாணம்.

### தொண்டைமண்டல சதகம்.

சீரொன்று தேவர் முதலாதி லாற்றில்லை வாழ் முதலி,
யாரென்று நாமம் படைத்தது போன்மற் றவரு மந்தப், பே
ரொன்றுபெற்றது வேளாண் முதன்மையைப் பெற்றல்லவோ
வாரொன்று பூண்முலை யாயெளிதோ தொண்டைமண்டலமே.

என்பதனாலும்,



ஆதியில், பிரமாவானவர், வேளாளரை முதலில் சிருட்டித்து, அவர்களால், உயிர்களுக்கு வேண்டிய வுணவுகளைத் தரும் உழவு தொழிலை முதற்காரணமாயிருந்து நடத்தி உபகரித்து வரச்செய்ததால், அவர்களுக்கு முதலியாரென்னும் பெயர்வந்ததெனக. இதற்குப் பிரமாணம்.

### கம்பர் - ஏரெழுபது.

அழுங் குழவிக் கன்புடைய தாயேபோ லனைத் துயிர்க்கு
மெழுங் கருணைப் பெருக்காள ரெனியரோ யான்புகழ
வுழுங் கொழுவிற் கருவிதி யுலகமுதற் கருவாகச்
செழுங் கமலத் தயனிவரைச் செய்துலகஞ் செய்யானேல்.

என்னுஞ் செய்யுளானுங் காண்க.

மேற்கூறிய பிள்ளைப் பட்டமும், முதலிப் பட்டமும் தொன்றுதொட்டு வேளாளருக்கே உரியனவெனக.

அன்றியும், தேசபேதங்களின்படி வேளாளருக்கு வெவ்வேறு பெயர்கள் உண்டு. தெற்கில்-முதலியார், பிள்ளைகள், செட்டிகள், ரெட்டிகள், உடையார்எனவும், மேற்கில்-கவுண்டரெனவும், வடக்கில்-வெலமரெனவும் வழங்கி வருகின்றது.

## வேளாளர், துலாபாரம் நிறுத்தல்.

இதற்குத் துலாபுருஷதானமென்று பெயராம். இந்த தானத்தைச் செய்பவர்கள் மஹாராஜாக்கள். தங்கள் பாவத்தைப் போக்கவேண்டுமென்று இஷ்டதேவதைகளைப் பூசித்து, துலையின் ஒருதட்டில் திரவியத்தை வைத்து, மற்றொரு தட்டில் தாங்கள் ஏறிநின்று கடவுளைப் பிரார்த்தித்து, துலையிலிருந்து இறங்கிவிடவேண்டும். பின்னர், துலையிலிருக்கும் திரவியங்களைச் சற்பாத்திரமாயுள்ள பிராமணர்களுக்குத் தானஞ் செய்துவிடவேண்டும்.

அந்த துலாபாரத்தில், அரசரை நிறுத்தற்குரிய அதிகாரம் வேளாளருக்கே உரியதாம். வேறு வருணத்தார் செய்யப்படாதோ வெனில்? செய்யப்படாது. நிலத்தில், விளைபொருளெல்லாம், எடுத்தல், முகத்தலாகிய, அளக்கோல், மரக்காலாதிகருவிகளைக்கொண்டு கணக்கிடவேண்டியதலால்

அக்கருவிகள், வைசியராகிய வேளாளரிடம் வைக்கப்பட்டிருக்கின்றன.

சிலகாலத்துக்கு முன்பு, தஞ்சைமாநகரத் தரசனுக்கு, வேளாளராகிய அணைக்குடி - சாமிநாதப்பிள்ளை யென்னும் பிரபுவானவர், துலாபாரஞ் செய்வித்தா ரென்பது உலகப்பிரசித்தமாகத் தெரிந்த விஷயமாம். அவர்சந்ததியார் இக்காலத்து மிருக்கின்றனர். அவர் இருந்த அரண்மனை 32-கட்டுகளுள்ளதென்பதை இக்காலத்துங் காணலாம்.

## திருச்குறள்.

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

என நாயனார் கூறியபடி, அந்நிறைக்குரியார் வைசியராகிய வேளாளரேயாம்.

## திருக்கைவழக்கம்.

தலாபாரந் தாங்குந் தனியரசும் பொன்னுந்
துலாபாரந் தட்டினிற் றாக்குங்கை,
எனக் கம்பர் கூறியதனாலு முணர்க.

## ஆசீர்வாதக் கருத்து.

எப்போதும், பிராமணர்முதல், சகல சாதியாரும் ஒவ்வொரு சுபாசுபங்களில் புரோகிதர்களைக்கொண்டு ஆசீர்வதிக்கையில், அவர்கள் சொல்லும் சுலோகத்தின் தாற்பரியம்.

ஸ்ரீயாம் வர்த்திஷ்ய ஆயுஷ்ய மாயுதா
ஸோப மானம் மஹியது
தான்யந் தனம் பசுபுத்ர லாபம்
சதசம் வச்சரம் தீர்க்க மாயு;

என வைசிய வேளாளருக்குரிய தனம், தானியம், பசு, இம்மூன்றும் முறையே வாகுபிபத்தையும், கிருஷியையும், கோசம் ரட்சணையையும் குறிக்கின்றன. அந்தணர், அரசர் தொழிலை விரும்பாது, உலகோபகாரத்தைச் செய்யும் வேளாளர் தொழிலையே மேலாக விரும்புவா ரென்பது பெறப்பட்டது.